**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

Mcop 314/2023 c/w Mcop 316/2023

ம.சா1 சுப்புலட்சுமி

| | |
|---|---|
| Name | : சுப்புலட்சுமி |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | :19.11.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் எம்.சி.ஒ.பி. 314/23 வழக்கில் 1ம் மனுதாரர் ஆவேன். நான் எனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் சேர்த்து என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

1. 2.08.2023ம் தேதியிட்ட பாவூர்சத்திரம் காவல்நிலைய குற்ற எண். 257/2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 1.

2. 5.09.2023ம் தேதியிட்ட குற்ற எண். 257/23 வழக்கின் குற்றபத்திரிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 2

3. 2.8.2023ம் தேதியலேட் முருகனின் பிரேத பரிசோதனை அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 3

4. 25.1.2024ம் தேதிய லேட் முருகனின் வாரிசு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 4

5. 1 முதல் 4 மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் முறையே ம.சா.ஆ 5 முதல் ம.சா.ஆ 8 . மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

2ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

என் கணவரின் வேலை, வயது, வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் பயணம்

செய்த டி.என்.76.ஏ.கே.3730 என்ற இருசக்கர வாகனத்தை ஒட்டி வந்த நபரான சக்திவேல் திடீரென சாலையில் வலதுபக்கம் திரும்புவதற்காக குறுக்காக வந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் பேரூந்தின் முன் மையபகுதியில் சேதாரங்கள் இருந்தது என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக பார்வைமகசர், வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பார்வைமகசர், வரைபடத்தை தாக்கல் செய்தால் இருசக்கர வாகனத்தை ஒட்டியநபர் தான் விபத்திற்கு காரணம் என தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லைஎன்றால்சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம்எதிர்மனுதாரர் கவனக்குறைவு இல்லை என்பதால் எனது மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.